# அரசுப் பொதுத் தேர்வு - மார்ச் - 2025

**11**

# பொருளியல்

## விடைக்குறிப்பு

**PREPARED BY**

**Dr. C.SUDHAKAR M.A.,M.Phil.,B.Ed.,SET.,Ph.D.,**
**GBHSS USSOOR**

**Mr. K.SUDHAKAR M.A.,B.Ed.,**
**GHSS PANAMADANGI**

### A – TYPE

| | | |
|---|---|---|
| 1 | ஈ | ஆடம் ஸ்மித் |
| 2 | அ | மக்கள் தொகை/குறிப்பிட்ட நில அளவு |
| 3 | ஈ | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் |
| 4 | இ | ₹ 400 |
| 5 | இ | உப்பு |
| 6 | ஈ | கூலி |
| 7 | ஆ | குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி |
| 8 | ஆ | MC = MR |
| 9 | ஈ | மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு |
| 10 | அ | இறுதிநிலைச் செலவு |
| 11 | ஈ | இயங்கும் தன்மையுடையது |
| 12 | இ | -50 |
| 13 | ஈ | மறைமுக வேலையின்மை |
| 14 | ஈ | அதிக மானியம் வழங்குவதால் |
| 15 | ஆ | விலைக் கொட்பாடு |
| 16 | ஈ | 2017 |
| 17 | ஈ | முற்றுறிமை |
| 18 | இ | மனிதன் உருவாக்கிய கருவிகள், சாதனங்கள் |
| 19 | ஈ | சென்னை |
| 20 | இ | வகையீடு |

### B - TYPE

| | | |
|---|---|---|
| 1 | இ | -50 |
| 2 | ஈ | சென்னை |
| 3 | ஈ | இயங்கும் தன்மையுடையது |
| 4 | இ | வகையீடு |
| 5 | இ | ₹ 400 |
| 6 | ஈ | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் |
| 7 | ஈ | மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு |
| 8 | ஈ | கூலி |
| 9 | ஆ | MC = MR |
| 10 | ஈ | அதிக மானியம் வழங்குவதால் |
| 11 | ஈ | 2017 |
| 12 | அ | மக்கள் தொகை/குறிப்பிட்ட நில அளவு |
| 13 | இ | உப்பு |
| 14 | ஈ | முற்றுறிமை |
| 15 | ஆ | குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி |
| 16 | ஆ | விலைக் கொட்பாடு |
| 17 | இ | மனிதன் உருவாக்கிய கருவிகள், சாதனங்கள் |
| 18 | ஈ | மறைமுக வேலையின்மை |
| 19 | ஈ | ஆடம் ஸ்மித் |
| 20 | அ | இறுதிநிலைச் செலவு |

www.Padasalai.Net

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| வினா எண் | விடை | மதிப் பெண் |
|---|---|---|
| 21 | பொருளியலில் பண்டங்கள் என்பது பண்டங்கள் மற்றும் பணிகளைக் குறிக்கும். பண்டங்கள் தொட்டு உணரக்கூடியது, மாற்றக்கூடியது, பரிமாற்ற மதிப்பு உடையது. | 2 |
| 22 | 1. கிஃபன் பொருள்கள் கீழ்நிலை பண்டங்கள் ஆகும். **எ.கா.** கம்பு சோளம்.<br>2. ஏழை எளிய மக்கள் நுகரும் கீழ்நிலை பண்டங்கள் கிஃபன் பொருள்கள் எனப்படும் ஏழை எளிய மக்கள் நுகரும் கீழ்நிலை பண்டங்களின் விலை அதிகரித்தால் அதனுடைய தேவை அளவும் அதிகரிக்கும் விலை குறைந்தால் தேவை அளவும் குறையும். | 2 |
| 23 | செலவு என்பது உற்பத்திச் செலவை குறிக்கும். ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்தி செலவு ஆகும். | 2 |
| 24 | முற்றுரிமை போட்டியில் நிறுவனங்கள் தாங்கள் உற்பத்தி செய்த பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க அதிக விளம்பரங்களை செய்வதற்காக மேற்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனை செலவுகள் எனப்படுகின்றன.<br>**எ.கா.** தொலைக்காட்சி வானொலி செய்தித்தாள் | 2 |
| 25 | மக்கள் ரொக்கப் பணமாக கையில் வைத்திருப்பது நீர்மை விருப்பம் ஆகும். | 2 |
| 26 | சம உற்பத்தி செலவுக்கோடு என்பது ஒரு நிறுவனம் தனது உற்பத்திக்குத் தேவையான இரண்டு உள்ளீடுகளை (எ.கா.உழைப்பாளர், மூலதனம்) ஒரு குறிப்பிட்ட மொத்த செலவில் வாங்கக்கூடிய அனைத்து சேர்க்கைகளையும் காட்டும் கோடு ஆகும். | 2 |
| 27 | உழைப்பு என்பது உற்பத்திக் காரணியான உழைப்பாளர் வருமானம் ஈட்டுவதற்காக தனது உழைப்பு சக்தியை பயன்படுத்துவதாகும். **மார்ஷல்** | 2 |
| 28 | உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை இச்செலவு மாறாமல் நிலையாக இருக்கும். **எ.கா** வாடகை, காப்பீட்டுச் செலவு. | 2 |
| 29 | 1. **பெயரளவு கூலி அல்லது பணக் கூலி:** பணமாக வழங்கப்படும் கூலி<br>2. **உண்மை கூலி:** பண்டங்களாகவோ பணிகளாகவோ கூலி வழங்கப்படும்<br>3. **துண்டு கூலி:** முடிந்த வேலையின் அளவில் வழங்கப்படும் கூலி<br>4. **நேரக் கூலி:** உழைக்கும் நேரத்தை பொறுத்து வழங்கப்படும் கூலி. | 2 |
| 30 | அணிகள் என்பது செவ்வக வடிவில் [ ] அடைப்புக்குறிக்குள் நிரைகளாகவும் நிரல்களாகவும் வரிசைபடுத்தப்பட்ட எண்களின் தொகுப்பாகும். | 2 |

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: வினா எண் 40- க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| வினா எண் | விடை | மதிப் பெண் |
|---|---|---|
| 31 | 1. பணிகள் என்பது கண்களுக்குத் தெரியாத ஒன்று அதை உணர முடியும். **எ. கா.** ஆசிரியர் பணி<br>2. பணியாளர்களிடமிருந்து பணிகளைப் பிரிக்க முடியாது.<br>3. பணிகள் அழியக்கூடியவை<br>4. பணிகள் பல்வேறு இடங்களை பொறுத்து வேறுபடுகின்றன. | 3 |
| 32 | இறுதிநிலை வருவாய் என்பது கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படும் கூடுதல். **(அல்லது)** $MR = TR_n - TR_{n-1}$ **(அல்லது)** $MR = \Delta TR / \Delta Q$ | 3 |

| | | |
|---|---|---|
| 33 | 1. **ஜமீன்தாரி முறை:** இம்முறையை நிலைச்சுவான்தார்களும், ஜமீன்தாரர்களும் விவசாயிகளிடமிருந்து நில வருவாயை பெற்று அரசுக்கு செலுத்தினர்.<br>2. **மஹல்வாரி முறை:** இம்முறை கிராம மக்களாலான குழுவினர் நிலத்தை விவசாயிகளிடமிருந்து பிரித்துக் கொடுத்து அவர்களிடமிருந்து வருவாயை பெற்று அரசுக்கு செலுத்தினர்.<br>3. **இரயத்துவாரி முறை:** இம்முறை முதன் முதலில் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது. நில உரிமையாளர்கள் நேரடியாக நிலவருவாயை அரசுக்கு செலுத்தினர். | 3 |
| 34 | 1. பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது.<br>2. விரைவில் அழுகும் தன்மையுடைய இப்பண்டங்கள் சந்தைப்படுத்துவதில் பல் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.<br>3. இந்த பிரச்சனையை சமாளிக்க இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம், அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி (1955) **"குளிர்பதன கிடங்கு ஆணை 1964"** என்பதை ஏற்படுத்தியது. | 3 |
| 35 | 1. இக்கோட்பாட்டை எடுத்துரைத்தவர் F.B.ஹாலே<br>2. வணிகத்தில் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான வெகுமதியே இலாபம்.<br>3. ஒரு தொழில் முனைவோர் தொழிலில் இடர்களை எதிர்கொள்ளல் மிக முக்கிய பணி ஆகும். | 3 |
| 36 | 1. பாகுபாடான சுங்க வரிக் கொள்கை மூலம் பிரிட்டிஷ் அரசு இந்திய கைவினைப் பொருட்களை அளித்தது.<br>2. நவாப் மற்றும் அரசர்கள் காலம் முடிவுக்கு வந்த உடன் இந்திய கைவினைப் பொருட்களை காப்பாற்ற எவரும் இல்லாத நிலை ஏற்பட்டது.<br>3. இந்தியாவில் ரயில்வே அறிமுகமான பின் பிரிட்டிஷ் பொருட்களுக்கான உள்நாட்டு சந்தை அதிகரித்தது. | 3 |
| 37 | 1. **ஊரக வேலை திட்டம்:** ஊரக சமுதாய ஆக்கப்பணிகள் செய்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளின் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம்.<br>2. **ஊரகத் தொழில்மயமாக்கல்:** வேலைவாய்ப்பினை உருவாக்க ஊரகப் பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.<br>3. **தொழில்நுட்பக் கல்வி:** பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வேலைவாய்ப்பு சார்ந்த படிப்புகளை உருவாக்கி அதன் மூலம் சுயமாக தொழில் துவங்க வழிவகை செய்ய வேண்டும். | 3 |
| 38 | 1. தமிழ்நாட்டின் சுகாதார குறியீடானது இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.<br>2. தமிழகத்தில் பச்சிளம் குழந்தை இறப்பு வீதம் 14 ஆகும். இது பிற மாநிலங்களை காட்டிலும் மிகக் குறைவு.<br>3. தமிழ்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 70.6 ஆண்டுகளாக உள்ளது<br>4. தமிழ்நாடு மூன்றடுக்கு உடல் நல அடிப்படை கட்டமைப்பை கொண்டுள்ளன. அவை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக நல மையங்கள் ஆகியனவாகும். | 3 |
| 39 | $y = 5x^4$ சமன்பாடு தரப்பட்டுள்ளது<br>சாய்வு $= \frac{dy}{dx}$<br>$\frac{dy}{dx} = 5(4)x^{4-1}$<br>$= 20x^3$<br>$x = 10$ என இருக்கும் போது சாய்வு $= 20(10)^3$<br>$= 20{,}000,$<br>சாய்வு $= 20{,}000$ | 3 |

| | | |
|---|---|---|
| 40 | 1. உழைப்பு இடம்பெயறக்கூடியது.<br>2. உழைப்பு என்பது செயல் உற்பத்திக் காரணி.<br>3. உழைப்பு அழியக்கூடியது.<br>4. உழைப்பை "உழைப்பாளரிடமிருந்து" பிரிக்க முடியாது. | 3 |

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 **x** 5 = 35

| வினா எண் | விடை | மதிப் பெண் |
|---|---|---|
| 41. அ. | **பொருளியியலின் தன்மை :**<br>**(i) ஆடம்ஸ்மித் :** ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறார். - **செல்வ இலக்கணம்**<br>**(ii) ஆல்பிரட் மார்சல் :** ஒருபுறம் செல்வம், மற்றொருபுறம் மனித நலம் பற்றி படிப்பதே பொருளியல் என்பதை விளக்குகிறார். - **நல இலக்கணம்**<br>**(iii) இராபின்சன் :** விருப்பங்களோடும் கிடைப்பருமை (பற்றாக்குறை) உள்ள மாற்றுவழிகளில் பயன்படக்கூடிய சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றிய அறிவியலே பொருளியல் - **பற்றாக்குறை இலக்கணம்**<br>**(iv) சாமுவேல்சன் :** சமுதாயம் தற்கால வளங்களையும், எதிர்கால தலைமுறையும் பயன்படுத்துவது குறித்த இயல். - **வளர்ச்சி இலக்கணம்**<br>**பொருளியியலின் எல்லை :**<br>**(i) பொருளியியல் ஓர் அறிவியல் :** பொருளியியல் மனித நடவடிக்கைகளைப் பற்றிப் படிக்கும் ஓர் அறிவியல்<br>**(ii) பொருளியியல் ஓர் கலை:** கலையியல் என்பது ஒரு குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகளைப் பற்றியது. பொருளியியல் அறிவியலும், கலையியலும் இணைந்த ஒன்று.<br>**(iii) இயல்புரை பொருளியியல்:** உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவுத் தொகுதி. இது பொருளியியல் கோட்பாட்டை விளக்க முயற்சிக்கிறது.<br>**(iv) நெறியுரை பொருளியியல்:** இது பொருளியியல் என்பது எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை விளக்கும் இயல். | 5 |
| ஆ. | 1. புள்ளி விவரங்களை தொகுத்தல், ஒழுங்குற அமைத்தல், கணக்கிடுதல், முடிவுகளை கட்டுப்படுத்துதல் போன்றவற்றிற்கு ICT உதவுகிறது.<br>2. CD, DVD, SD Card, Projector, Smart Phone, இணையம், கம்ப்யூட்டர் போன்ற தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் வேகமாகவும், அதிகமாகவும் துல்லியமாகவும் பொருளியலுக்கு தகவல் தந்து உதவுகிறது.<br>3. Word, Excel, PPT, SPSS (Statistical Package for the Social Science) போன்றவை பொருளியல் ஆய்வாளர்களுக்கு பயன்படுகின்ற முக்கிய மென்பொருள் ஆகும்.<br>4. ICT வளர்ச்சி ஐந்து கட்டங்களை கடந்துள்ளது.<br>  1. கணிணி<br>  2. PC/Laptop<br>  3. நுண் செயலி<br>  4. இணையம்<br>  5. வயர்லெஸ் தொடர்புகள் | 5 |

www.Padasalai.Net

42. அ.

**இலக்கணம்:**


"விலை குறையும்போது தேவையின் அளவு அதிகரிக்கிறது, விலை அதிகரிக்கும்போது தேவை குறைகிறது" **ஆல்பிரட் மார்ஷல்.**

**எடுகோள்கள்:**

1. நுகர்வோரின் வருமானம், விருப்பம், மற்றும் சுவையில் மாற்றமில்லை.
2. பிற பொருட்களின் விலையில் மாற்றமில்லை.
3. பிற பதிலிகள் இல்லை.
4. பொருளின் தரத்தில் மாற்றமில்லை.


**தனி நபர் அட்டவணை** **வரைபடம்**

| விலை | தேவை அளவு |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |





தனிநபர் தேவைக்கோடு A, B மற்றும் C ஆகியவற்றை கூட்டினால் அங்காடி தேவை வளைகோடு பெறலாம். 5

- விலை ₹ 3 ஆக இருக்கும் போது 2+2+4 = 8.
- விலை ₹ 1 ஆக இருக்கும் போது அங்காடி தேவை 6+8+8 = 22




**தேவை விதியின் விதிவிலக்குகள்**





விலை குறைவு தேவை சுருக்கத்தையும் விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இந்நிலையில் தேவை கோடு இடமிருந்து வலமாக மேல் நோக்கி உயரும். இது விதிவிலக்கான தேவை கோடு என அழைக்கப்படுகிறது.

www.Padasalai.Net

**ஆ. நிறைவுப் போட்டியில் – குறுகியகால நிறுவனச் சமநிலை:**

1. குறுகிய காலத்தில் சில காரணிகள் மட்டும் நிலையானவை.
2. தொழிற்சாலை நிர்ணயிக்கும் விலையை நிறுவனம் ஏற்கும்.
3. **நிறுவனச் சமநிலை MC = MR**




வரைபட விளக்கங்கள்.

5

**43. அ. விகித அளவு விளைவு விதி:**

நீண்ட காலத்தில் அளனத்து உற்பத்தி காரணிகளும் மாறக்கூடியவை. அளனத்து உற்பத்திக் காரணிகளும் மாறும் போது உற்பத்தியில் ஏற்படும் மாற்றமே விகித அளவு விளைவு விதி ஆகும்.

**விகித அளவு விளைவு விதியின் மூன்று நிலைகள்.**

**வளர்ந்து செல் விகித அளவு**


அனைத்து உள்ளீடுகளும் 1% உயரும் போது வெளியீடுகளும் 1% க்கும் மேல் உயர்கிறது.

**மாறா விகித அளவு**

அளனத்து உற்பத்திக் காரணிகளும் 1% உயரும் போது வெளியீடுகளும் அதே அளவு சம விகித அளவில் 1% உயருமு.

**குறைந்து செல் விகித அளவு**

அனைத்து உள்ளீடுகளும் 1% உயரும் போது வெளியீடுகளும் 1% க்கும் குறைவாக உயர்கிறது.





**வரைபட விளக்கம்:**

1. a க்கும் b க்கும் இடையேயான பகுதி வளர்ந்து செல் விகித விளைவு விதியை குறிப்பிடுகிறது.
2. b க்கும் c க்கும் இடையேயான பகுதி மாறா விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.
3. c க்கும் d க்கும் இளடகயயான பகுதி குறைந்து செல் விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது.

5

**ஆ.**

1. ஒரே ஒரு உற்பத்தியாளர். எனவே முற்றுரிமையில் நிறுவனமே தொழிற்சாலை ஆகும். அதனால் கீழ்நோக்கி சரியும் தேவை வளைகோட்டை கொண்டுள்ளது. விலை குறைந்தால் மட்டும் அதிகம் விற்கமுடியும்.
2. முற்றுரிமை நிறுவன சமநிலையானது. 'E' என்ற MC = MR
3. சமநிலை உற்பத்தியில் நிறுவனம் இலாபம் பெறுகிறது.




சமநிலை உற்பத்தி = 3 அலகு
சராசரி வருவாய் = ரூ.80/-
சராசரி செலவு = ரூ.50/-
ஓர் அலகிற்கான லாபம் = ரூ.30/-
மொத்த லாபம் 30x3 = ரூ.90/- ஆகும்.

5

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**44. அ.** (மதிப்பெண்: 5)

1. பொருளாதார திட்டமிடுதலின் நோக்கம் பற்றாக்குறையான வளங்களை திறமையாக பயன்படுத்தி இலக்குகளை அடைவதாகும். இதுவரை இந்தியா 12 திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.
2. தற்போது திட்டகுழுவிற்கு பதிலாக நிதி ஆயோக் மூலம் திட்டமிடுதல் மேற்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | ஐந்தாண்டுத்திட்ட காலம் | நோக்கங்கள் |
|---|---|---|
| 1 | முதல் திட்டம் 1951-56 | வேளாண்மை முன்னேற்றம் - ஹாரேட் டாமர் மாதிரி |
| 2 | இரண்டாம் திட்டம் 1956-61 | தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துவதாகும் - மஹலநோபிஸ் மாதிரி |
| 3 | மூன்றாம் திட்டம் 1961-66 | சுதந்திரமான பொருளாதாரம் மற்றும் சுய முன்னேற்றம் - காட்கில் திட்டம் |
| 4 | நான்காம் திட்டம் 1969-74 | நிலையான வளர்ச்சி மற்றும் தற்சார்பு |
| 5 | ஐந்தாம் திட்டம் 1974-79 | வறுமை ஒழிப்பு |
| 6 | ஆறாம் திட்டம் 1980-85 | வறுமை ஒழிப்பு மற்றும் தொழில்துறை தற்சார்பு |
| 7 | ஏழாம் திட்டம் 1985-90 | வேலைவாய்ப்பை உருவாக்குதல் |
| 8 | எட்டாம் திட்டம் 1992-97 | முழு வேலைவாய்ப்பு, கல்வி, சமூக நலம் |
| 9 | ஒன்பதாம் திட்டம் 1997-02 | சமூக நீதி மற்றும் சமத்துவம் |
| 10 | பத்தாம் திட்டம் 2002-07 | வறுமை மற்றும் தலா வருமானம் இருமடங்கு உயர்த்த |
| 11 | பதினொன்றாம் திட்டம் 2007-12 | விரைவான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியாகும் |
| 12 | பனிரெண்டாம் திட்டம் 2012-17 | விரைவான மற்றும் நிலையான வளர்ச்சியாகும் |

**ஆ.** (மதிப்பெண்: 5)

1. **மக்கள் தொடர்பு பிரச்சனை :** எழுத்தறிவின்மை, போதிய தொழில் நுட்ப அறிவின்மை, நம்பிக்கை குறைவு ஆகியவை.
2. **வேளாண்மை சார்ந்த பிரச்சனை :** உள்ளீடுகள் கிடைக்கப் பெறாமை, அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு, சிறு நிலங்கள் மற்றும் சிறு சிறு துண்டுகளாக்கப்பட்ட நிலவுடைமைகள் போன்றவை.
3. **உள் கட்டமைப்பு சார்ந்த பிரச்சனை :** நீர், மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.
4. **பொருளாதாரம் சார்ந்த பிரச்சனை :** குறைவான வருமானம், கடன்சுமை ஆகியவை பொருளாதாரம் சார்ந்த பிரச்சனைகளாக உள்ளது.
5. **நிர்வாகம் சார்ந்த பிரச்சனை :** குறைந்த கூலி, வரவு செலவுகளை சரிவர முறையான பயன்படுத்தாமை ஆகியவை நிர்வாகச் சிக்கல்கள் சார்ந்த பிரச்சனைகள்.

**45. அ.** (மதிப்பெண்: 5)

**இலக்கணம்:** ஒரு பொருளை வாங்க முடிவு செய்து கொடுக்க நினைக்கும் விலைக்கும் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடு நுகர்வோர் எச்சம் எனப்படும்.


நுகர்வோர் எச்சம் = **TU – (PxQ)**

www.Padasalai.Net

**II. அட்டவணை :**

| ஆப்பிள் | தகு விலை | உண்மை விலை | நுகர்வோர் உபரி |
|---|---|---|---|
| 1 | 50 | 10 | 40 |
| 2 | 40 | 10 | 30 |
| 3 | 30 | 10 | 20 |
| 4 | 20 | 10 | 10 |
| 5 | 10 | 10 | 0 |
| மொத்தம் | 150 | 50 | 100 |

**III. வரைபடம் :**




**ODCQ-OPCQ → PDC என்ற கோடிட்ட பகுதி நுகர்வோர் உபரி**

**ஆ.**

1. பணச் செலவு
2. உண்மை செலவு
3. வெளிப்படையான செலவு
4. உள்ளார்ந்த செலவு
5. பொருளாதார செலவு
6. சமூகச் செலவு
7. வாய்ப்புச் செலவு
8. அமிழ்த்தப்பட்ட செலவு
9. மிதக்கும் செலவு
10. மாறும் செலவு
11. மாறாச் செலவு
12. முதன்மைச் செலவு **(ஏதேனும் 5 விளக்கத்துடன்)**

5

**46. அ.**

**கோட்பாடு விளக்கம்:**


1. கடன் நிதிக் கோட்பாடு புதிய தொன்மைக் கோட்பாடு எனவும் அழைக்கப்படுகிறது, **சுவீடன்** நாட்டைச் சார்ந்த பொருளியல் வல்லுநர்கள் **விக்செல், ஒலின், வைனர்** மற்றும் **குன்னர் மிர்தால்** ஆகியோர் இக்கோட்பாட்டை மேம்படுத்தினர்.
2. கடன் நிதிகளை பயன்படுத்திக்கொள்ள வழங்கப்படும் விலை வட்டி ஆகும்.
3. கடன் நிதி தேவை மற்றும் அளிப்பின் சமநிலைப் புள்ளியில் வட்டி விகிதம் தீர்மானிக்கப்படுகிறது.

**II. கடன்நிதிக்கான தேவை : I+C+H (LD கோடு) :**

1. முதலீட்டுத்தேவை (Investment) → **I**
2. நுகர்வுத்தேவை (Consumption) → **C**
3. பதுக்குவதற்கான தேவை (Hoarding) → **H**

**III. கடன்நிதிக்கான அளிப்பு : S+BC+DH+DI (LS கோடு) :**

1. சேமிப்பு (Savings) → S
2. வங்கிக்கடன் (Bank Credit) → BC
3. பதுக்கியதை மீட்டல் (Dishoarding) → DH
4. முதலீடு செய்யாதிருத்தல் (DisInvestment) → DI




**V. வரைபட விளக்கம் :**

1. வரைபடத்தில் LD கோடும் L.S கோடும் ‘E’ என்ற புள்ளியில் வெட்டிக்கொள்கின்றன.
2. இந்த புள்ளி சமநிலை புள்ளி ஆகும். இப்புள்ளியில் வட்டிவீதம் OR, கடன் நிதி அளவு OM ஆகும்.

5

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| ஆ. | 1. **ஜனநாயகம் மற்றும் மதசார்பின்மை:** ஜனநாயகத்தை உறுதியாக நம்பியவர் நேரு. அவர் பேச்சுரிமை, குடிமக்கள் உரிமை, வாக்குரிமை, மதசார்பின்மை இந்தியாவிற்கு நேரு தந்த மிகப்பெரிய பங்களிப்பு.<br>2. **திட்டமிடுதல்:** இந்தியாவில் திட்டமிடுதலை அறிமுகப்படுத்தியவர் நேரு. திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவதைக் குறிக்கும் என்கிறார்.அறிவியல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் நேருவின் பங்களிப்பு மறக்க முடியாது, இந்தியாவில் IIT யை தொடங்கினார்<br>3. **ஜனநாயக சமதர்மம்:** நேருவின் சமதர்மம், ஜனநாயக சமதர்மம் ஆகும். இந்தியாவை சமதர்ம சமூகமாக கட்டமைக்க விரும்பினார். | |
| 47.<br>அ. | **I. நோக்கங்கள்**<br>1. அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தல்.<br>2. பன்னாட்டு வியாபாரத்தில், நமது பங்கினை அதிகரித்தல்.<br>3. கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்.<br>4. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.<br>5. கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.<br>6. தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்.<br>**II. பண்புகள்**<br>1. பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்.<br>2. தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுவது.<br>3. நெறிமுறை படுத்தப்பட்ட நடைமுறைகள்<br>4. தனிப்பட்ட விருப்பப் பகுதியை கொண்டது.<br>5. தாராளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிககப்படுகிறது.<br>6. அதிக அளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. | 5 |
| ஆ. | 1. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.21 கோடி.<br>2. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12 வது இடத்தில் உள்ளது.<br>3. நகரமயமாதலின் சராசரி அளவு தமிழகத்தில் 48.4% உள்ளது.<br>4. இந்திய மக்கள் தொகையில் தமிழகம் 6% கொண்டுள்ளது.<br>5. சமச்சீர் பாலின விகிதம் என்பது பெண்களின் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதை குறிக்கிறது.<br>6. தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது இந்த விகிதம் மிக அதிகமாகும்.<br>7. பாலின விகிதத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. | 5 |

www.Padasalai.Net